Journal of Inventive and Scientific Research Studies (JISRS) ISSN: 2584-0630 (Online)
www.jisrs.com Vol: I Issue: 2 January 2024

# அகநானூற்றில் திருமணச் செய்திகள்

சு. அனுசுயாதேவி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
கோ. வெங்கடசுவாமி நாயுடு தன்னாட்சிக்கல்லூரி, கோவில்பட்டி
E-mail: anushoumik@gmail.com

**Received**: February 04, 2024, **Accepted**: February 10, 2024, **Online Published**: February 15, 2024

முன்னுரை

தமிழ் இலக்கியங்கள் வாழ்வியலைப் படம் பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடிகளாக அமைகின்றன. அவை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்ககாலத்து மக்களின் வாழ்க்கை, வாணிகம், பண்பாடு, பழக்க வழக்கம் முதலியவற்றை எடுத்துக் காட்டி நம்நினைவில் நிலை நிறுத்துகின்றன. பண்டைத் தமிழரின் மணமுறை காதல் மணம் - களவு மணம் எனப்பட்டது. அதைச் சமூக ஒழுக்கமாகக் கொண்டதால், களவொழுக்கம் என்றனர். விரும்பிய ஆடவனைத் தலைவிக்கு மணம் செய்து கொடுக்கும் பழக்கமும் அக்காலத்தில் இருந்துள்ளது. அகநானூற்றில் திருமணச் சடங்கு மங்கலச் சடங்காகக் கொண்டாடப்பட்டது என்பதை இக்கட்டுரையின் மூலம் அறியலாம்.

களவுமணம்

ஒருவனும் ஒருத்தியும் தாமாகவே சந்தித்து உள்ளத்தாலும் உடலாலும் ஒன்றுபட்டு மறைவாகப் பழகி வருவதற்குக் ‘களவுமணம்’ என்று பெயர். முன்பின் அறியாத ஒரு ஆணும் பெண்ணும் திடீரென்று ஒருவரோடு ஒருவர் சந்திக்கின்றனர். இருவரும் மணமாகாதவர்கள். ஒத்த பருவமும் ஒத்த உருவமும் ஒத்த நிலைமையும் உடையவர்கள், இருவர் கண்களும் ஒன்றுபடுகின்றன. உள்ளத்தாலும் ஒன்றுபடுகின்றனர். பின்னர் இருவரும் இரவிலும் பகலிலும் அடிக்கடி சந்தித்து அகம் மகிழ்கின்றனர். இவர்களுடைய சந்திப்புக்குத் தோழி துணை செய்வாள். இந்த நிகழ்ச்சிக்குக் களவுமணம் என்று பெயர்.

கற்பு மணம்

தலைவன் பெண்ணின் பெற்றோரின் சம்மதம் பெற்று அவளை மணந்து கொள்வான். அவர்கள் சம்மதிக்கா விட்டால், தலைவன் அவளைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு போய்விடுவான். பின்பு தலைவனும்இ தலைவியும் வெளிப்படையாக வாழ்ந்து இல்லறம் நடத்துவர். களவின்றிக் காதலனும்

காதலியும் வெளிப்படையாக ஒன்று சேர்ந்து வாழ்வதே கற்பு மணமாகும்.

> "கூனல் எண்கின் குறுநடைத் தொழுதி ........
> புதுநாண் ஒடுக்கமும் காண்குவம், யாமே" (அகநா.112)

என்ற பாடலில் களவு மணம் நடத்திவரும் தலைவனிடம் ஊரார் அறிய மணம் புரிந்து கொள்ளும்படி தோழி வலியுறுத்தும் செய்தி இடம்பெறுகிறது. களவு மண வாழ்க்கையை ஊரார் அல்லது பெற்றோர் அறியும்முன் கற்புமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற தலைவியின் ஆவலைத் தோழி வெளிப்படுத்துகிறாள்.

திருமணச் சடங்குகள்

ஆண், கற்பு மணம் புரிந்த பெண்ணைக் கைவிட்டு, வேறு பெண்ணுடன் களவுமணம் வாழத் தொடங்கிய காலக் கட்டத்தில், திருமண வாழ்வில் உண்மையையும் ஒழுக்கத்தையும் கடைப்பிடிக்க வேண்டும் என்ற நோக்கில், திருமணத்திற்கான சடங்குகளைப் பெரியோர்கள் தோற்றுவித்தனர்.

> "பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணம் என்ப" (தொல்.கற். 143)

என்ற தொல்காப்பியச் சூத்திரம் இதனை உறுதிப்படுத்துகிறது. சங்க இலக்கியங்களிலேயே அகநானூற்றில் மட்டும்தான் திருமணத்தின்போது நடத்தப்படும் சடங்குகள் பற்றிய செய்திகள் இடம்பெறுகின்றன.

> "உழுந்து தலைப்பெய்த கொழுங்களி மிதவை
> ............
> ஒடுங்கு ஈர்ஓதி மாஅ யோளே"
> (அகநா.86)

என்ற பாடலின்மூலம், திருமணத்தின் முதல் நிகழ்ச்சியாக விருந்து நடைபெற்றதையும், மணப்பந்தலின்கீழ்ப் பரப்பப்பட்ட மணலில் விளக்கு வைக்கப்பட்டதையும் அறிய முடிகிறது. மேலும், இளங்காலைப் பொழுதில் உரோகிணியுடன் திங்கள் கூடிய நல்லோரையில் மலரும்இ நெல்லும் தூவப் பெற்ற நீர்க்குடங்களை ஏந்திய, பிள்ளைப் பெற்ற முதுபெண்டிர் நால்வர், மணமக்களை வாழ்த்தி மணநீராட்டிய செய்தியும் தெளிவாகிறது. திருமணச் சடங்குகளில் பெண்டிரே பங்கேற்றலும் அவர் பெருமைக்குரியதாகிறது (அகநா. 86. 7-10) ஆயின் இச்சிறப்பு புதல்வன் பெற்ற மங்கல மகளிர்க்கு மட்டுமே என்பதும் உணர்த்தற்பாலது.

மா. இராசமாணிக்கனார் கூறுகையில்,பலர் அறிய விருந்து நடத்தி மணமகளை நீராட்டிப் புத்தாடை உடுத்து அணிகலன்கள் அணிவித்து, மணமக்கள் இருவரையும் மணப்பந்தலில் உட்கார வைத்துப் பலர் அறியச் செய்தலே திருமண வினையாக அக்காலத்தில் இருந்தது என்கிறார். சங்ககாலத் திருமணம் என்ற தலைப்பில் வி. நாகசுந்தரம் எழுதியுள்ள கட்டுரையில், இப்பாடல்கள் எந்த ஆரியச் சடங்கையும் குறிப்பிடவில்லை என்பதைக் காணலாம். நெருப்பு வளர்க்கப்படவில்லை. தீ வலம் வருதல் இல்லை. புரோகிதரோ, பூசாரியோ இல்லை.

அன்பின் தொடர்பு

சங்க காலத்தில் களவு ஒழுக்கம் சிறப்பாகவே நடைபெற்றது. காதல் திருமணம் புலவர்களால் பெரிதும் புகழ்ந்து போற்றப்பட்டது என்பதனை,

"புலவர் புகழ்ந்த நார்இல் பெருமரம்
நிலவரை எல்லாம் நிழற்றி
அலர்அரும்பு ஊழ்ப்பவும் வாரா
தோரே"(அகநா.273. 15-17)

என்பதனால் உணரலாம். மேலும், இவ்வாறு ஒருவரை ஒருவர் மனம் ஒப்பிச் சேர்தல் வழிவரும் அன்பின் தொடர்பு என்றே கொண்டனர்.

தான் விரும்பிய தலைவனுக்குத் தந்தையும் தாயும் தன்னைத் திருமணம் செய்து கொடுக்க முன்வருவதைத் தலைவி,

"வேங்கைக் கண்ணியன் இழிதரு நாடற்கு
இன்தீம் பலவின் ஏர்கெழு செல்வத்து
எந்தையும் எதிர்ந்தனன் கொடையே" (அகநா.282. 10-12)

என்று கூறுகிறாள்.

திருமண நாளன்று செய்யப்பட்ட சடங்குகள்

திருமணம் விழா போன்று அக்காலத்தில் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. திருமணம் நடக்கும் நாளை வதுவைநாள் என்று அழைக்கின்றனர். இந்நாள் தலைவன் தலைவியின் வாழ்நாள் முழுவதும் மறக்கமுடியாத நாளாக இருக்கின்றது.

"எண்ணு முறை நிறுத்த பண்ணினுள்ளும்
புதுவது புனைந்த திறத்தினும்
வதுவை நாளினும் இனியனாள்
எமக்கே" (அகநா.353, 15-17)

என வதுவைநாள் எடுத்துக் காட்டப்படுகின்றது.

வளர்பிறை நாளில், உதய காலத்தில், தீய கோள்களின் சேர்க்கையின்றி நாள்கோள் பயின்றிருக்கும் காலமே திருமணத்திற்கு உரிய காலமாகக் கொள்ளப்படுகிறது. இதனை,

"கனைஇருள் அகன்ற கவின்பெறு காலை
கோள்கால் நீங்கிய கொடுவெண் திங்கள்
கேடுஇல் விழுப்புகழ் நாள்தலை
வந்தென" (அகநா.86. 5-7)

என்ற வரிகள் விளக்குகின்றது.

வயது முதிர்ந்த நல்ல பெண்கள் தம்தலையிலே தண்ணீர்க் குடத்தை ஏந்தி நின்றனர். அந்த நீர்க் குடங்களை முன்னும் பின்னுமாக மாற்றி மாற்றிக் கொடுத்தனர். பிள்ளை பெற்ற நான்கு பெண்கள் அந்த நீர்க்குடங்களை வாங்கி மணமக்களை நீராட்டினர். நீராட்டும்போது,

"கற்பினின் வழாஅ நற்பல உதவிப்
பெற்றோற் பெட்கும் பிணையை
ஆக" (அகநா. 86. 13-14)

திருமண உறுதிவிழா

மணமகளின் பெற்றோர் மது அருந்தி, வீட்டை அலங்கரித்து, மணலைக் குவித்து, எமது மகளுக்குத் திருமணம் செய்ய நிச்சயித்துள்ளோம் என்னும் செய்தி கூறி திருமணத்தின் முன்னர்ச் செய்யப்படும் திருமண உறுதிவிழா ஒன்றும் நிகழ்த்தப்படுகிறது.

"நனைவிளை நறவின் தேறல்
மாந்தி

புனைவினை நல்இல் தருமணல் குவைஇ
பொம்மல் ஓதி எம்மகள் மணன்என
வதுவை அயர்ந்தனர் நமரே''
(அகநா.221. 1-4)

என மண அறிவிப்புச் செய்ததை அகநானூறு சுட்டுகிறது.

## தெய்வங்களுக்குச் சிறப்புச் செய்தல்

திருமணத்தை முன்னிட்டு இல்லுறை தெய்வங்களுக்குப் பண்டைக் காலத்தில் சிறப்பு செய்யப்பட்டது.

''நம்இறை மெல்விரல் கூப்பி
இல்உறை கடவுட்கு ஆக்குதும் பலியே'' (அகநா.282. 7-18)

ஏன இல்லுறைத் தெய்வங்களை வணங்கினர்.

பரிசம் கொடுத்தல் என்பது மணமகன் மணப்பெண்ணிற்கு வழங்குவதாக இருந்தது. இப்பழக்கம் இன்று மாறி நிலவுகின்றது.

''அசையினள் இருந்த ஆய்தொடிக் குறுமகள்
நலம்சால் விழுப்பொருள் கலம்நிறை கொடுப்பினும்
பெறல்அருங் குரையன்''
(அகநா.280. 4-6)

என மணமகன் பரிசம் கொடுப்பது மரபாகவே கொள்ளப்பட்டதை மேற்கூறிய வரிகள் விளக்குகின்றன.

## திருமணத்தில் வாத்தியம்

திருமணச் சடங்கில் சுற்றத்தார் அனைவரும் பங்கு கொள்வர். சுற்றமும் நட்பும் சூழத் திருமணம் தொடங்கப்படும் போது முழவு முதலிய இன்னிசைக் கருவிகள் முழங்குவது மங்கலச் சடங்காகவே கொள்ளப் பட்டது.

''முழவுமுகம் புலரா விழவுடை வியல்நகர்
மணன்இடை யாகக் கொள்ளான்''
(அகநா.397. 3-4)

## திருமணத்தின் விருந்து

திருமணத்திற்கு வருவோர்க்கு உணவு அளிக்கப்பட்டது. உளுந்து கலந்து ஆக்கிய சோற்றை மணநாளில் வழங்குவதாக அகநானூறு குறிப்பிடுகின்றது.

''உழுந்து தலைப்பெய்த கொழுங்களி மிதவை
பெருஞ் சோற்று அமலை நிற்ப''
(அகநா.86. 1-2)

மேலும், உளுந்தஞ் சோற்றுடன் இறைச்சியும் கலந்து, புழுக்கின நெய்கலந்த வெண்சோறும் வழங்கியதை அகநானூற்றின் மற்றொரு பாடல் உணர்த்துகின்றது.

## மணமுறைகள்

பண்டைத் தமிழ் மக்களிடத்தே இயற்கையாக நிகழ்ந்தனவாகிய பழக்க வழக்கங்கள் மற்றும் ஒழுக்கங்களையே தமிழ் இலக்கியங்கள் பாராட்டிச் சிறப்பித்தன. அன்பு நெறியில் ஓர் ஆணும் பெண்ணும் கூடி வாழும் வாழ்க்கை அகப்பொருள் எனப்பட்டது.

சங்ககாலத் தமிழர்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தவர்களாவர். தாம் வாழ்ந்த சூழலுக்கு ஏற்ப, தமது திருமண முறைகளை அமைத்துக் கொண்டனர்.

## மணமனை அலங்கரித்தல்

திருமணக் காலத்தில் மணமக்கள் வீட்டுச் சுவர்களுக்குச் செம்மண் பூசி, வீட்டில் புதுமணல் பரப்பி, மாலைகளைத் தொங்கவிட்டு மகிழ்ச்சியோடு முதல் செயலாகத் தங்களது இல்லங்களை அழகுபடுத்தினர்.

"புனைமாண் இஞ்சி பூவல் ஊட்டி
மனைமணல் அடுத்த மாலை நாற்றி
உவந்தினிது அயரும் என்ப"
(அகநா.195. 3-5)

என்ற அடிகளில் அறியலாம். திருமணம் நடக்கும் வீட்டில் சங்கொலியும் பறையொலியும் முழங்கும் (வி.சி. சசிவல்லி, தமிழர் திருமணம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை-113,ப.45).

காப்புநூல் அணிதல்

மணமகளின் சுற்றத்தார் விருப்பம் உண்டாகும்படி கூடி இவர்கட்கு மெல்லிய மலரையுடைய வாகை மரத்தினது பழுத்த இலையை அங்குள்ள முதிர்ந்த கன்றால் (புதைக்கப்பட்ட) பள்ள நிலத்திலே படர்ந்த அறுகம் புல்லினது மழைப்பெயலால் தோன்றிய கிழங்கின் நறுமணமிக்க அரும்புகளோடு விரவித் தொடுத்த வெள்ளிய காப்பு நூலை அணிந்து, தூய திருமண உடையால் அழகு பெறும்படி செய்து, புதுமணல் மிக்க மணப்பந்தலிலே, திருமணச் சின்னமாகக் கருதப்பட்ட இழை அணிவித்து விழாக் கொண்டாடியதன் காரணமாக மணமகள் உடலில் அரும்பிய வியர்வையை விசிறியால் வீசி நீக்கி அவளைத் தலைவனுக்கு அளித்தார்கள்.

இம்முறையே தமிழரின் தன்னேரில்லாத தனியுரிமை உடைய திருமண முறையாகும். இது மிகு தொல் பழங்காலத்தே தமிழகத்து நிலவிய ஈருயிர் ஒன்றுசேர் ஓருயிர்க்கிழமை எனப்படும் திருமணமாகும். மணத்திற்கு முன் தலைவிக்குச் சிலம்புகழீஇ நோன்பு நடைபெறும். மணத்தில் முதல் நிகழ்ச்சியாக விருந்து அளித்தல். மணப்பந்தலில் புதுமணல் பரப்பப்பட்டு விளக்கு வைக்கப்படுகிறது (மேற்படி, ப.47-48).

தொகை நூல்கள் வாயிலாகப் பழந்தமிழரின் திருமண நிகழ்ச்சிகளால் அறியவல்ல செய்திகள்.

1. மணமக்கள் இல்லம் செம்மண்பூசி, புதுமணல் பரப்பி, மாலைகள் தொங்கவிடப்பட்டு அலங்கரிக்கப்படுதல்.
2. மணம் நடக்கும் வீட்டில் சங்கொலி, பறையொலி முழங்கும்.
3. மணத்திற்கு முன் தலைவிக்குச் சிலம்புகழிஇ நோன்பு நடைபெறும்.
4. மணத்தில் முதல் நிகழ்ச்சியாகச் சிறந்த விருந்து அளித்தல்.
5. மணப்பந்தலில் புதுமணல் பரப்பப்பட்டு விளக்கு வைக்கப்படுகிறது.
6. இறைவழிபாடு செய்தல்.
7. புள் நிமித்தம் பார்த்தல்.
8. இளங் காலை நேரத்தில் திங்கள் உரோகிணியுடன் சேரும் நல்லோரையில் திருமண விழா நடைபெறல்.
9. திருமணமுழவும், பெரிய முரசும் முழங்கும்.
10. மங்கலப் பெண்டிர் குடங்களில் நீரேந்தி வருவர்.

11. அந்நீர்க் குடங்களில் நெல்லும், மலரும் தூவி மக்களை ஈன்ற மகளிர் நால்வர் மணமகளை வாழ்த்தி மண நீராட்டுவர்.
12. காப்பு நூலைக் கையில் கட்டுதல்.
13. புத்தாடை அணிவித்தல்
14. இழை அணிவித்தல்
15. பெற்றோர் மணமகளைத் தலைவனுக்கு வாழ்த்தி அளித்தல் போன்றனவாகும்.

பரிசங் கொடுத்து மணத்தல்

சங்க நூல்களின் துணை கொண்டு பழந்தமிழரிடையே வழக்கிலிருந்த வேறுபல திருமண முறைகள் எவை என்பதையும் அறிவோம். அவற்றுள் ஒன்று மணமகளுக்கு அவளது பெற்றோரிடமும் பரிசம் அளிப்பது. இப்பரிசம் அணிகலன்களாகவோ அல்லது பணம், நிலம், சொத்தாகவோ வழங்கப்பெறும். மணமகளின் பெற்றோர் கேட்கும் பரிசத் தொகை எவ்வளவோ, அதை மணமகனின் பெற்றோர் கொடுத்தால் தான் திருமணம் நடக்க ஒப்புதல் அளிக்கப்படும்.

அகநானூற்றுப் பாடல் ஒன்றில் மதுரை மருதனிள நாகனார் என்னும் புலவர் தலைவிக்கு ஈடான பரிசத் தொகையைக் குறிப்பிடும் பொழுது,

“அருந்திறற் கடவுள் செல்லூர்க் குணாஅது
பெருங்கடல் முழக்கிற் றாகி யாணர்
இருப்பிடம் படுத்த வடுவுடைய முகத்தார்
கடுங்கண் கோசர் நியமம் ஆயினும்
உறுமெனக் கொள்குநர் அல்லர்
நறுநுதல் அரிவை பாசிழை விலையே” (அகநா.90. 9-14)

எனப் பாடியுள்ளார். அதாவது தலைவியின் தந்தை இவளது பசிய அணிகட்கு வாழும் புதுவருவாயை உடைய நியமம் என்னும் ஊரினைக் கொடுப்பினும் அமையும் எனக் கொள்வர் அல்லர் எனக் கூறுகிறார் (மேலது, ப51-52).

திணைக்கலப்பு மணம்

உப்பு விற்கும் உமணக் குடியின் குமரியர் இவர்தம் இரு பாடல்களில் தலைவியராக வரும் உமணப் பெண் தந்தையொடு மலைநாட்டிற்கு உப்பு விற்கச் செல்கிறாள். நெல்லுக்கும் உப்புக்கும் நேர்விலை என்று பண்டமாற்றுப் பகர்கின்றாள். சங்குவளை ஒலிப்ப வீசி நடக்கும் அவள் ஒசிந்த நடையிலும், நாய் குரைக்கக் கேட்டு வெரூஉம் அவள் மருண்ட பார்வையிலும், உள்ளத்தை அடிமையாக்குகின்றான் ஓர் மலை நாட்டு இளைஞன். உப்புச் சகடத்தை ஏற்றிழிவுடைய குன்றுகளில் மடுத்து இழுத்துச் செல்லும் காளைபோல், வெய்து உயிர்க்கின்றான். இஃதோர் திணைக்கலப்பு மணம், நெய்தற் தலைவிக்கும் குறிஞ்சித் தலைவனுக்கும் காதற்றொடுப்பு நிகழ்கின்றது (அகநா.140).

“நெல்லும் உப்பும் நேரே ஊரீர்
கொள்ளீ ரோவெனச் சேரிதொறு நுவலும்
அவ்வாங் குந்தி யமைத்தோ ளாய்நன்
மெய்வாழ் உப்பின் விலை எய்யாம்” (அகநா. 360)

என்பதும் ஓர் கலப்பு மணப்பாடல், நெய்தல் மகளுக்கும், முல்லை

மகனுக்கும் நிகழும் காதலைப் புனைவது, நெல்லளவிற்கு உப்பளவு கிடைக்கும் என்று கூறிச் செல்லும் உமணக் குமரியைப் பார்த்து, கடலுப்பின் விலையைக் கூறினாய், அறிந்தேன். நின் மெய்யுப்பின் விலைதான் தெரியவில்லை என்று குறும்பாகவும், காதற் குறிப்பாகவும் கேட்டான். ஈண்டும் அம்மூவனாரின் மொழிப் புதுமையைக் காண்கிறோம். சொல் விளையாட்டு சங்க மொழித்தன்மையன்று. பிற்காலத் தமிழில் பெருகிய ஒரு மொழி நயம், உப்பு என்னும் சொல்லுக்கு, சுவை, இனிமை, சத்து என்ற பொருள்களும் உண்டாதலின், மெய்வாழ் உப்பு என்று புணர்ச்சியின்பத்தைச் சுட்டினான் காதற் குறும்பன். இவ்வாறு பண்டைக்கால மணமுறைகளை அகநானூற்றின் மூலம் அறியமுடிகிறது.

முடிவுரை

அகநானூற்றில் திருமணச் சடங்குகள் தொடர்பான செய்திகளை இரு பாடல்கள் (86,136) மூலமும், திருமண வகைகளுள் களவுமணம், கற்புமணம் என்ற இரண்டு நிலைகள் சங்க காலத்தில் இருந்ததையும், திருமண விருந்தின்போது, உளுத்தஞ்சோறுடன் கூடிய கறி படைக்கப் பட்டதையும், உரோகிணி உடன் சந்திரன் கூடக்கூடிய நல்ல நேரத்தில் மலரும் நெல்லும் தூவி முதுபெண்டிர் வாழ்த்துவதையும், தலைவிக்கு வாகையிலையின் கிழங்கிலுள்ள அரும்புகளோடு சேர்த்துக் கட்டப்பட்ட வெண்ணூல் காப்பாக சூடப்பட்டதையும், தூய உடை, பல அணிகலன்கள் அணிவிக்கப்பட்டதையும், ஆரியச் சடங்குகள் எதுவும் நடைபெறவில்லை என்ற செய்திகளையும் அறிய முடிகிறது.விரும்பிய ஆடவனைத் தலைவிக்கு மணம் செய்து கொடுக்கும் பழக்கமும் அக்காலத்தில் இருந்துள்ளது. திருமணச் சடங்கு மங்கலச் சடங்காகக் கொண்டாடப்பட்டது. இதில் சுமங்கலிகள் மட்டுமே கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர். திருமண உறுதிவிழா கொண்டாடப்பட்டுள்ளன. இவ்விழா இன்றும் பின்பற்றப்பட்டு வருகிறது. இது நிச்சயதார்த்தம் என்னும் பெயரில் கொண்டாடப்படுகிறது என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறியலாம்.

துணைநூற் பட்டியல்


சுப்பிரமணி, கே.எஸ். “உலகத் திருமண முறைகளும் பழக்கவழக்கங்களும்” மணிமேகலைப் பிரசுரம்,தியாகராய நகர்,,சென்னை–17, 1998.

செயராசு நத்தானியேல்,சு. அகநானூற்றில் காப்படும் மக்கள் வாழ்வியல், நான்காவது கருத்தரங்கு மலர், இந்தியப் பல்கலைக் கழகத் தமிழ்துறைச் சார்பு வெளியீடு, 1972.

காந்தி, க. - தமிழர் பழக்கவழக்கங்களும், நம்பிக்கைகளும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1ம் பதிப்பு, சென்னை, 1980.